## பா.ஜ.க. கூட்டணிக் கட்சிகளும் எதிர்ப்பதை கவனத்தில் கொள்வீர்!

# பொது சிவில் சட்டம்: ஒன்றிய அரசு மறுபரிசீலனை செய்க!

## திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கை!

சென்னை, ஜூலை 8-
ஹிந்து மதம் என்ற சனாதன வேத முறைப்படி உள்ள ஹிந்து சட்டத்தில் ஒரே சீர்மை எல்லா பிரிவினர்களுக்கும் உண்டா? பொது சிவில் சட்டத்தை நாடாளுமன்ற நிலைக் குழுவிலேயே தி.மு.க., காங்கிரஸ், கம்யூனிஸ்டுகள் மற்றும் பல மாநில கட்சிகளும் எதிர்த்துள்ளன.

பா.ஜ.க. கூட்டணி கட்சிகள்கூட அ.தி.மு.க. போன்றவை எதிர்ப்பதை கவனத்தில் கொள்ள வேண்டாமா? யோசித்து மறுபரிசீலனை செய்க என்று திரா விடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கை விடுத்துள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:-

'கிடப்பது கிடக்கட்டும்; கிழவியைத் தூக்கி மணையில் வை' என்ற ஒரு கிராமப்புற பழமொழிக்கொப்ப, நாட்டில் மக்களை வாட்டக்கூடிய விலைவாசி உயர்வு, இளைஞர்களுக்கு வேலை கிட்டாத வேதனை, இல்லத்தரசிகளுக்கு எரிவாயு (கேஸ்) விலை உயர்வு, கிராமப்புற வேலை வாய்ப்புக்கான போதிய (100நாள் வேலைத் திட்டம்) நிதிக் குறைப்பு மணிப்பூர் மாநிலத்தில் பற்றி எரியும் தீயை அணைக்க அதிதீவிர நடவடிக்கைகளில் ஈடுபடாது வாரக் கணக்கில் நீள்வது பற்றி வாய் திறக்கவோ, ஆறுதல் கூறவோ செல்லாத உயர் ஆளுமை (பிரதமர்) இப்படிப்பட்ட அவலங்களுக்கிடையே அவசர அவசரமாக நாட்டிற்கு ஒரே பொது சிவில் சட்டத்தை நிறைவேற்றி அவசரக் கோலத்தை அள்ளித் தெளிக்கிறது ஆர்.எஸ்.எஸ். பா.ஜ.க. ஆட்சி!

இந்தப் பொது சிவில் சட்டம் அமலாக்குவதுபடி நாடு முழுவதும் ஒரே சீர்மையான (Uniform Civil Code) சட்டம் தேவை என்று வாதாடுகிறார்

சட்ட ஆணையத்திற்குத் தாக்கீது (Direction) தருகிறார் பிரதமர் மோடி!

ஒரே நாடு, ஒரே மதம், ஒரே மொழி, ஒரே கலாச்சாரம், ஒரே ரேஷன் கார்டு, ஒரே தேர்தல் இப்படி எல்லாவற்றிற்கும் 'ஒரே ஒரே' கோஷம் போடும் அவர்களைப் பார்த்து 'ஒரே ஜாதி என்று சட்டம் இயற்றுவீர்களா?' என்று நாம் தொடர்ந்து எழுப்பி வரும் 'ஒரே கேள்விக்கு' ஏனோ இன்னமும் பதில் கூறாமல், 'ஒரே மவுனம்' நிலவுகிறது?

இந்த 'சீர்மை' (Uniformity) என்பது பன்மொழிகள், பல கலாச்சாரங்கள், பன் மதங்கள், பல் வகையான தட்பவெட்பங்கள் நிலவும் 140 கோடி மக்கள் வாழும் பரந்த நாட்டில், இது சாத்தியமா? விரும்பத்தக்கதா? ஏற்கத்தக்கதா? என்பதை நாட்டின் நல் அறிஞர்கள் அன்று முதல் இன்றுவரை கேள்வியாகக் கேட்டு, கூறும் அறிவுரை பா.ஜ.க.வின் 'கேளாக் காதில் ஊதிய சங்காக' ஆகிவிட்ட பரிதாபம்தான் மிச்சம்!

### அறிஞர் அண்ணா - பிரதமர் ஜவகர்லால் நேரு!

முன்பு மாநிலங்களவையில் பேசும்போது, அறிஞர் அண்ணா அருமையாக ஒரு கருத்தை முன்வைத்தார், 'Unity is different from Uniformity' 'நாட்டின் ஒற்றுமை என்பது வேறு; நாட்டின் ஒரே சீர்மை என்பது வேறு' என்று!

அன்றைய பிரதமர் ஜவகர்லால் நேரு பலமுறை இதுபற்றிக் கூறும்போது, 'Unity in diversity' 'பன்முகத்தன்மையில் ஒற்றுமை' என்ற தேவையான மறுக்க முடியாத கருத்தியலை முன்வைத்தார்!

அதைப்பற்றியெல்லாம் கவலைப்படாமல் இப்போது ஆர்.எஸ்.எஸ். பா.ஜ.க. ஆட்சி பிரதமர் மோடி தலைமையில் நடைபெறும் ஆட்சி இதில் அவசரம் காட்டுவது ஏன்?

(1) காஷ்மீர் தனி அந்தஸ்து 370 சட்டம் நீக்குதல்

(2) இராமன் கோவில் கட்டுதல்



(3) பொது சிவில் சட்டம் என்ற வாக்குறுதிகளை நிறைவேற்றிவிட்டோம் என்று கூறி, ஹிந்தி மாநில வடபுலத்துத் தேர்தல்களில் வாக்கு அறுவடை செய்யவா? அல்லது கொழுந்து விட்டு எரியும் பல்வேறு மக்கள் நலம் சார்ந்த பிரச்சினைகளைத் திசை திருப்பவா?

### பா.ஜ.க. கட்சியில்கூட எதிர்ப்புக்குரல்!

நாடு முழுவதும் ஒரே சட்டம் என்று கூறும்போது, தொடக்கத்திலேயே அது செய்ய முடியாத ஒன்று நடைமுறை சாத்தியமற்றது என்று ஒப்புக்கொள்வதைப் போல, பழங்குடி மக்கள், வடகிழக்குப் பகுதி மற்ற பகுதி மக்களின் எதிர்ப்புக்குரல் பா.ஜ.க. கட்சியில்கூட கிளம்பியுள்ளதால், அவர்களுக்கு இது பொருந்தாது என்று கூறுவதே, இதன் முக்கிய வாதத்தை முதலிலேயே முறியடித்துவிட்டதே, இல்லையா?

எந்த ஒரு சட்டமும் சிறுபான்மை சமூகத்தவர்களுக்கு எதிராக என்ற உள்நோக்கத்தோடு கொண்டு வந்து நிறைவேற்றிடத்தான் துடியாய்த் துடிக்கிறது பா.ஜ.க. என்பதை விவரம் அறிந்த அத்துணை பேரும் அறிவார்கள்.

### நோபல் பரிசாளரான அமர்த்தியாசென்!

நோபல் பரிசாளரான அமர்த்தியாசென் இதுபற்றி ஒரு கேள்விக்குப் பதில் அளிக்கையில், "இது ஹிந்து ராஷ்ராவுடன் முடிச்சுப் போட்டு இணைக்கப்படுகிற முயற்சிக்கான முன்னோடித் திட்டம்'' என்று தெளிவாகப் பதில் அளித்துள்ளார்!

சட்டக் கமிஷனின் பரிந்துரை இது என்று ஒரு வாதம் கூறப்படுமேயானால், அது ஏற்கத்தகுந்ததா?

### விளக்கம் தர முன்வந்துள்ளார்களா?

இதற்கு முந்தைய 21 ஆவது (2018) சட்டக் கமிஷன், உச்சநீதிமன்ற ஒய்வு பெற்ற நீதிபதி சவுகான் தலைமையில், பொது அரசமைப்புச் சட்டம் நிறைவேற்ற தேவையில்லை என்று அழுத்தந் திருத்தமான கருத்தை பரிந்துரைத்துள்ளது. அடுத்து வந்த ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி, அதை நிறைவேற்றவேண்டும் என்று கூறுகிறார் என்றால், இடைவெளியிலான சில ஆண்டுகளில், நாட்டின் நிலைகளில் ஏதாவது தலைகீழ் புரட்சி, பூகம்பம் ஏற்பட்டுவிட்டதா? என்ற கேள்வி பல வட்டாரங்களிலிருந்து கிளம்பியுள்ளதே அதற்குரிய விளக்கம் தர ஒன்றிய அரசோ, பிரதமரோ முன்வந்துள்ளார்களா?

பல பா.ஜ.க. முதலமைச்சர்கள், கட்சியினர் கூட (வடகிழக்கு மற்றும் பழங்குடியின ஆதரவாளர்கள் கூறுவதால்) விதிவிலக்கு தருவதற்கு ஒப்புதல் உள்ளதால், இது 'ஒரே சட்டம்' ஆக முடியுமா?

ஹிந்து மதம் என்ற சனாதன வேத முறைப்படி உள்ள ஹிந்து சட்டத்தில் ஒரே சீர்மை எல்லா பிரிவினர்களுக்கும் உண்டா?

அதில் உள்ள 'சூத்திரனுக்கொரு நீதி தண்டச் சோறுண்ணும் பார்ப்புக்கொரு நீதி சாத்திரம் சொல்லிடுமாயின் அது சாத்திரமன்று சதியென்று கண்டோம்' என்று பாடிய பார்ப்பன பாரதியின் கருத்துப்படி, 'ஹிந்துலா'வின் பல ஜாதி, பல கோத்திர, திருமண சடங்கு சம்பிரதாய, சொத்துப் பிரிவினைகளை அகற்றி அனைத்து மதம், அனைத்து ஜாதி, அனைத்து மக்களுக்கும் ஒரே சட்டம் (Uniform Criminal Law) என்று சீர்மையான மெக்காலே செய்த ஒரே கிரிமினல் குற்றச் சட்டம்போல் இதனைச் செய்வோம் என்று கூற முன் வருவார்களா? என்கிற கேள்விக்குப் பதில் அளிக்கட்டும்; பிறகு பொதுசிவில் சட்ட அமல்பற்றிப் பேசட்டும்!

### மறுபரிசீலனை செய்க!

பா.ஜ.க. கூட்டணி கட்சிகள்கூட அ.தி.மு.க. போன்றவை எதிர்ப்பதை கவனத்தில் கொள்ள வேண்டாமா? யோசித்து மறுபரிசீலனை செய்க!

நாடாளுமன்ற நிலைக் குழுவிலேயே தி.மு.க., காங்கிரஸ், கம்யூனிஸ்டுகள் மற்றும் பல மாநில கட்சிகளும் எதிர்த்துள்ளன என்பதும் சுட்டிக்காட்டத் தகுந்தது.

எனவே, இதை கைவிடுங்கள்; இன்றேல் கடும் விலையை வரும் 2024 இல் நாடாளுமன்றப் பொதுத் தேர்தலில் பா.ஜ.க. தரவேண்டியது காலத்தின் கட்டாயமாகிவிடும்.!

இவ்வாறு அவர், தமது அறிக்கையில் கூறியுள்ளார்.





ஈரோடு தெற்கு மாவட்ட கழக செயலாளரும், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, மதுவிலக்கு, ஆயத்தீர்வை துறை அமைச்சருமான சு.முத்துசாமி அவர்களின் வளர்ப்பு மகள்கள் M.சௌமியா P.கார்த்திக், M.சுருதி D.பூர்ணா கிஷோர் ஆகியோரின் திருமண விழாவில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான், ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் ஈ.வி.கே.எஸ்.இளங்கோவன் உள்ளிட்ட மாநில, மாவட்ட, மாநகர, நகர, ஒன்றிய, பேரூர், கிளை கழக நிர்வாகிகள், அனைத்து அணிகளின் நிர்வாகிகள், ஆன்றோர், சான்றோர்கள், அனைத்து கட்சி பிரமுகர்கள், கழக உடன்பிறப்புகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினர்.

## பொதுமக்களின் நலனுக்காக

# பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகளைச் செயல்படுத்தி வருகிறார் முதல்வர்!

## சட்டத் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி பேச்சு!

புதுக்கோட்டை, ஜூலை 8-
புதுக்கோட்டை மற்றும் திருமயம் ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகளை, சட்டம், நீதி மன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்ட அமைச்சர் எஸ்.ரகுபதி துவக்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் ஐ.சா. மெர்சி ரம்யா தலைமையில் நடைபெற்றது.

இதில் அமைச்சர் எஸ். ரகுபதி பேசியதாவது:-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொதுமக்களின் நலனுக்காக பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகளை சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள். அதன்படி கிராமப் புறங்களின் வளர்ச்சியை மேம்படுத்தும் வகையில் கிராமங்களின் தேவைகளை கேட்டறிந்து அவற்றை உடனடியாக நிறைவேற்றி வருகிறார். அந்தவகையில் இன்றையதினம் புதுக்கோட்டை மற்றும் திருமயம் ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகள் துவக்கி வைத்து, முடிவுற்றப் பணிகள் பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளன. மேலும் பொதுமக்கள் அனைவரும் தங்கள் பகுதிகளுக்குத் தேவையான வசதிகளை மேம்படுத்திக்கொள்ளும் வகையில் அரசுடன் இணைந்து "நமக்கு நாமே" திட்டத்தின்கீழ், பணிகளை மேற்கொண்டு அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்து கொள்ளலாம்.

அதன்படி, புதுக்கோட்டை ஒன்றியம், பெருங்களூரில் ஊராட்சி ஒன்றிய பொது நிதியிலிருந்து, ரூ.23 லட்சம் மதிப்பீட்டில் 450 மீட்டர் நீளமுடைய தேரோடும் வீதி சாலை மேம்பாட்டுப் பணியினையும் மற்றும் புதுக்கோட்டை, திருவப்பூர் முத்துமாரியம்மன் திருக்கோயில் ஊரணி ரூ.73.60 லட்சம் மதிப்பீட்டில் புனரமைக்கும் பணியினையும் துவக்கி வைக்கப்பட்டுள்ளது.

மேலும், திருமயம் ஒன்றியம், மகாத்மா காந்தி தேசிய ஊரக உறுதியளிப்புத் திட்டத்தின்கீழ், ரூ.22.65 லட்சம் செலவில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள இராங்கியம் ஊராட்சிமன்ற அலுவலகக் கட்டடம் திறந்து வைத்து, 20 நபர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டது. இராங்கியம் அரசினர் ஆரம்ப சுகாதார நிலை யத்தில், தேசிய சுகாதார திட்டத்தின்கீழ் ரூ.48 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுவரும் புற நோயாளிகள் பிரிவு கட்டடங்கள் மற்றும் ரூ.25 இலட்சம் மதிப்பீட்டில் செவிலியர் குடியிருப்பு கட்டடங்களையும் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்யப்பட்டன. மேலும் திருமயம் ஊராட்சி பேருந்து நிலையத்தில், 14வது நிதிக்குழு மானியத் திட்டத்தின்கீழ், ரூ.10 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ள குடிநீர் சுத்திகரிப்பு

நிலையத்தினையும், திருமயம் ஊராட்சியில், பிரதம மந்திரி வீடு கட்டும் திட்டத்தின்கீழ், தலா ரூ.50,000 வீதம் 3 மகளிர் சுயஉதவிக் குழுவினருக்கு ரூ.1.50 இலட்சம் மதிப்பிலான கடனுதவிகளையும், வட்டார வணிக வள மையம் திட்டத்தின்கீழ் 6 நபர்களுக்கு ரூ.50,000 வீதம் ரூ.3 இலட்சம் மதிப்பிலான தொழில் கடனுதவிகளையும், ஒரு நபருக்கு ரூ.50,000 மதிப்பில் சமுதாய முதலீட்டு நிதியும் வழங்கப்பட்டுள்ளது.

இதன்மூலம் பெண்கள் அனைவரும் தமது சொந்தக் காலில் நின்று வீட்டின் தேவைகளையும், நாட்டின் தேவைகளையும் பூர்த்தி செய்யும் வகையில் அதிக அளவிலான மகளிர் சுய உதவிக் குழுவினர்களுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சுழல்நிதி வழங்கி வருகிறார்கள்.

எனவே கிராமத்தில் உள்ள பொதுமக்கள் அனைவரும், தமிழ்நாடு அரசின் மூலம் செயல்படுத்தப்படும் மக்கள் நலத் திட்டங்களை உரிய முறையில் பெற்று பயனடைய வேண்டும்.

இவ்வாறு அமைச்சர் எஸ்.ரகுபதி தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சிகளில், புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் டாக்டர். வை.முத்துராஜா , மாவட்ட வருவாய் அலுவலர் மா. செல்வி, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் நா.கவிதப்பிரியா, மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர் த.ஜெயலட்சுமி, மாவட்ட இயக்க மேலாண்மை அலகு திட்ட இயக்குநர் ரேவதி, வருவாய் கோட்டாட்சியர் முருகேசன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ராம.சுப்புராம், நகர்மன்றத் தலைவர் திலகவதி செந்தில், மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர் மு.க.ராமகிருஷ்ணன், திருமயம் ஒன்றியக் குழுத் தலைவர் அழ.ராமு, ஒன்றியக் குழு உறுப்பினர் அழகு (எ) சிதம்பரம், உதவி ஆணையர் (இந்து சமய அறநிலையத்துறை) அனிதா, ஆசெந்தில், சு.சண்முகம், அ. சுப்பிரமணியன், நகர்மன்ற உறுப்பினர் கனகம்மன் பாபு, பால்ராஜ், எம்.சுப்பையா, தேவி முத்து, சுப. துரைராஜா, வடவாளம் க.செ.மணிமாறன், முல்லை, ரமேஷ், ராஜமாணிக்கம், புதுநகர் குமார், செல்வராஜ், முரளி,

பெரும் கொண்டான் விடுதி சுப்பிரமணியன், வி.என்.எம்.பாலு, ஒன்றிய கவுன்சிலர்கள் முத்துலட்சுமி சாமி அய்யா, தேவி இளங்கோவன், சதீஷ், ஊராட்சிமன்றத் தலைவர்கள் சாந்தி பொன்னையா (இராங்கியம்), சிக்கந்தர் (திருமயம்), உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## மக்களின் அறிவு வளர்ச்சிக்கு சர்வதேசத் தரத்தில் கலைஞர் நூலகம்!

# குறிப்பிட்ட காலத்தில் மதுரையில் உருவாக்கி -மக்களின் முதல்வராக மு.க.ஸ்டாலின் திகழ்கிறார்!

சென்னை, ஜூலை 8 -
மனிதனை வளர்ச்சிப் பாதையில் கொண்டு செல்லும் வாசிப்புப் பழக்கத்தை மேம்படுத்த அதி நவீன வசதிகளுடன் சர்வதேச தரத்தில் குறிபிட்ட காலத்தில் மதுரையில் கலைஞர் நூற்றாண்டு நூலகத்தை உருவாக்கியதன் மூலம் முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள், மக்கள் முதல்வராகத் திகழ்கிறார் என 'தினகரன்' நாளேடு 6.7.2023 அன்று தலையங்கத்தில் பாராட்டியுள்ளது.

அத்ததலையங்கம் வருமாறு:-

ஒரு மனிதனை வளர்ச்சிப் பாதையில் கொண்டு செல்லும். வாசிப்பு பழக்கமானது ஒரு மனிதனின் வாழ்வியலை மேம்படுத்தும். அந்த வகையில் மதுரை புதுநத்தம் சாலையில் ரூ.215 கோடி மதிப்பீட்டில், அதிநவீன வசதிகளுடன் சர்வதேச தரத்தில் கம்பீரமாக, காண்போரை கவரும் வகையில் கட்டப்பட்டுள்ளது கலைஞர் நூற்றாண்டு நூலகம். எழுத்தாளர், கதாசிரியர், நூலாசிரியர், திமுக தலைவர், முதல்வர் என பல பரிமாணங்களை தனது வாழ்க்கையில் பெற்ற கலைஞரின் நூற்றாண்டு விழா சிறப்பாக கொண்டாடப்படும் இந்த நேரத்தில், அவரது பெயரால் இந்நூலகம் அமைவது சிறப்புமிக்கது.

கடந்த 2022, ஜன.11ம் தேதி நூலக கட்டுமான பணிகளுக்கு முதல்வர் மு.க. ஸ்டாலின் அடிக்கல் நாட்டினார். கட்டுமான பணிகளை 18 மாதத்திற்குள் முடிக்க வேண்டுமென திட்டமிட ப்பட்டது. ஆனால், பணிகள் முன்னதாகவே முடிந்து, புத்தகங்களை அடுக்கும் பணி மட்டும் நடந்து வந்தது. தற்போது அனைத்துவிதமான பணிகள் முடிந்த நிலையில், வரும் 15ம் தேதி முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைக்க உள்ளார். கீழ் தளத்தில் நவீன பார்க்கிங், தரைத் தளத்தில் கலைக்கூடம் மற்றும் மாற்றுத்திறனாளிகள் படிக்கும் வகையில் வசதிகள் செய்யப்பட்டுள்ளன. முதல் தளம் குழந்தைகள் படிப்பதற்கேற்ற புத்தகங்கள் வைக்கப் பட உள்ளன.

2வது தளத்தில் கலைஞர் எழுதிய கட்டுரைகள், நூல்கள் அடங்கிய தளமாக அமைகிறது. 3வது தளத்தில் தமிழ் இலக்கிய புத்தகங்கள். 4வது தளத்தில் ஆங்கில நூல்கள், 5வது தளத்தில் ஐம்பெரும் காப்பியங்கள், பதினெண் கீழ்க்கணக்கு போன்ற நூல்கள், 6வது தளத்தில் திறந்த வெளி படிப்பகங்கள் மற்றும் உணவகம் என பல்வேறு வசதிகளுடன் அற்புதமான முறையில் கட்டப்பட்டுள்ளது. லிப்ட், எஸ்கலேட்டர் மற்றும் முழுவதும் குளிரூட்டப்பட்ட வசதிகளுடன் தென்மாவட்டத்திற்கு மணி மகுடமாக கலைஞர் நூலகம் உருவாக்கப்பட்டுள்ளது. இணையத்திலும் இதன் போட்டோக்கள் வைரலாகி வருகின்றன.

இதுபோன்ற பிரமாண்ட கட்டுமான பணிகளை குறிப்பிட்ட காலத்திற்குள் முடிப்பது அவ்வளவு எளிதானதல்ல. கடந்த அ.தி.மு.க. ஆட்சியில் பல திட்டங்கள் அறிவிப்போடு காலாவதியாகி விட்டன. முதல்வராக மு.க.ஸ்டாலின் பொறுப்பேற்ற நாள் முதல் அறிவித்த திட்டங்களை செயல்படுத்துவதில் மற்ற மாநில முதல்வர்களுக்கு மட்டுமல்ல... ஒன்றிய அரசுக்கும் முன்மாதிரியாக திகழ்கிறார். 2015ம் ஆண்டு அறிவிக்கப்பட்டு, பல சோதனைகளை கடந்து பிரதமர் மோடியால் கடந்த 2019, ஜன.27ம் தேதி அடிக்கல் நாட்டப்பட்ட எய்ம்ஸ் நிலை குறித்து சொல்லித் தெரிய வேண்டியதில்லை.

ஒரு நாட்டின் பிரதமர் அடிக்கல் நாட்டிய திட்டம் குறித்த அப்டேட்கள்தான் அவ்வப்போது வருகிறதே தவிர, கட்டுமான பணிகள் இதுவரை தொடங்கியபாடில்லை. அதே நேரம், சென்னையில் அமைக்கப்பட்ட கலைஞர் நூற்றாண்டு உயர் சிறப்பு மருத்துவமனை பற்றியும் சொல்லியாக வேண்டும். கடந்த 2022, மார்ச் 21ம் தேதி முதல்வரால் அடிக்கல் நாட்டப்பட்டது. எய்ம்ஸ் மருத்துவமனைக்கு நிகராக 6 தளங்கள், ஆயிரம் படுக்கைகள், 750க்கும் மேற்பட்ட டாக்டர்கள், பல்வேறு மருத்துவப் பிரிவுகளுடன் இந்த மருத்துவமனையும், 14 மாதங்களுக்குள் கட்டி முடிக்கப்பட்டு கடந்த மாதம் 15ம் தேதி கோலாகலமாக திறக்கப்பட்டது.

ஒருபுறம் அறிவு வளர்ச்சிக்கு நூலகம் மற்றும் மாணவ, மாணவிகளின் நலன் காக்கும் திட்டங்கள், மறுபுறம் தமிழக மக்களின் உடல் ஆரோக்கியத்தை காக்கும் வகையில் உயர் ரக மற்றும் அரசு மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்களும் தொடர்ந்து தமிழ்நாடு அரசால் அமைக்கப்பட்டு வருகிறது. அந்த வகையில் மக்களின் முதல்வராக மு.க.ஸ்டாலின் திகழ்கிறார்.

இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## 'தினகரன்' தலையங்கத்தில் பாராட்டு!



தினகரன்

கம்பீரமாய் கலைஞர் நூலகம்



தருமபுரி மேற்கு மாவட்டம் பாலக்கோடு மத்திய ஒன்றியம் பி.செட்டிஅள்ளி ஊராட்சி பூரத்தூர் கிராமத்தில் தி.மு.க. திராவிட மாடல் அரசின் ஈராண்டு ஆட்சி சாதனை விளக்கத் தெருமுனைப் பிரச்சாரக் கூட்டம் பாலக்கோடு மத்திய ஒன்றியக் கழகச் செயலாளர் முனியப்பன் ஏற்பாட்டில், தருமபுரி மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் முனைவர். பி.பழனியப்பன் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் தலைமைக் கழகப் பேச்சாளர் அப்துல் ரகுமான் பாரி கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார். உடன் மாநில விவசாய அணி துணை அமைப்பாளர் சூடப்பட்டி சுப்பிரமணி, மாவட்ட துணைச் செயலாளர்கள், ஒன்றிய கழக செயலாளர்கள், பேரூர்க் கழக செயலாளர்கள், முன்னாள் இந்நாள் மக்கள் பிரதிநிதிகள் மற்றும் ஏராளமான பொது மக்கள் கலந்து கொண்டனர்.

# கேரளாவில் பலத்த மழை!

புதுடெல்லி: ஜூலை 7-
கேரளா, கடலோர கர்நாடகா மற்றும் கோவாவுக்கு நேற்று (ஜூலை 6) ரெட் அலர்ட் எச்சரிக்கை விடுத்துள்ளது இந்திய வானிலை ஆய்வு மையம். காலை 8 மணி முதல் இரவு 8 மணி வரையிலான அலர்ட் இது. இம்மூன்று மாநிலங்களிலும் அதி கன மழையால் மக்களின் இயல்பு வாழ்க்கை வெகுவாக பாதிக்கப்ப ட்டுள்ளது. கேரளாவைப் பொறுத்த வரை மாநிலத்தின் பல பகுதிக ளிலும் கனமழை பெய்து வருகிறது.

ஒரு சில பகுதிகளில் ஆரஞ்சு அலர்ட்டும், ஒரு சில பகுதிகளில் ரெட் அலர்ட்டும் விடுக்கப்பட்டு ள்ளது. இன்று மட்டும் 11 மாவட்டங்களில் கல்வி நிலையங்களுக்கு விடுமுறை அளிக்கப்பட்டுள்ளது.

## 'தளபதி மு.க.ஸ்டாலினின்

# சின்ன சின்ன முத்துக்கள்'!

### சுரேஷ் தேவராஜன் தொகுப்பு நூல் வெளியீடு

சென்னை, ஜூன், 8-
முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் பல்வேறு நிகழ்ச்சிகளிலும், பொதுக் கூட்டங்களிலும் தெரிவித்த கருத்துகள், பொன் மொழிகளாக 'சின்ன சின்ன முத்துக்கள் பொன் மொழிகள் தளபதி மு.க. ஸ்டாலின்' என்ற பெயரில் சுரேஷ் தேவராஜனால் தொகுத்து வெளியிடப்பட்டுள்ளது.இந்த தொகுப்பு நூலில்

கட்சியினருக்குத் தெரிவிக்கும் செய் திகள் என்பதையும் தாண்டி, பொதுவாழ்வுக்

குப் பயன்படும் கருத்துகளும் இதில் மிளிர்வதைக் காணலாம். 'வியூகமும் கடுமையான உழைப்புமே அரசியலில் முடிவுகளைத் தீர்மானிக்கும்', 'என்னதான் பறவைகள் உயர, உயரப் பறந்து கொண்டு இருந்தாலும் இரை தேடி கீழே வந்துதான் தீர வேண்டும்', 'பாதை பண்படுத்தப்பட்டதாக இருக்கும் போதுதான் பயணத்தின் இலக்கினை விரைந்து எட்ட முடியும்' என்பதுபோன்றவை சிந்தனைக்கு விருந்தாக்கும் வகையில் கழகத் தலைவர் முதல்வர் அவர்களின் கருத்துகள் இந் நூலில் தொகுக்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.





ராணிப்பேட்டை மாவட்டம், அரக்கோணம் நகரக் கழக துணைச் செயலாளர் அ.அன்புலாரன்ஸ் நகர மன்ற துணைத் தலைவர் அ.கலாவதி ஆகியோரின் புதல்வி அ.கனிமொழிபா.ராஜி ஆகியோரின் திருமண வரவேற்பு நிகழ்ச்சி நாராயண திருமண மண்டபத்தில் நடைபெற்றது. இதில் கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி, மாநில சுற்றுச்சூழல் அணி துணைச் செயலாளர் ஆர்.விணோத்காந்தி ஆகியோர் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினர். சட்டமன்ற உறுப்பினர்கள் ஜே.எல்.ஈஸ்வரப்பன், எஸ்.சந்திரன், நகரச் செயலாளர் வி.எல்.ஜோதி, எ.கே.சுந்தரமூர்த்தி, எம்.சிவனாந்தம், துரை.மஸ்தான், எ.வி.சாரதி, அ.அசோகன், மு.கன்னையன், எஸ்.வினோத் மற்றும் பலர் கலந்துகொண்டனர். அ.அருண்லாரன்ஸ், அ.கௌதம் நன்றி கூறினர்.